2025 – ஏப்ரல் மாதம் 22– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 81 / 2024 C/W 80 / 2024*

*2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 2, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 2, காந்திமதி |
| கணவர் பெயர் | : | பிரபுகுமார் |
| ஊர் | : | இலந்தங்குழி கிராமம், |
| வட்டம் | : | குன்னம் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | கூலி வேலை |
| வயது | : | 42 |

<u>தேதி: **22.04.2025.**</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் MCOP.No. 80/2024 மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**<u>எனது சார்பாக:–</u>**

**9).**25.02.2024 –ம் தேதியிட்டு பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட புறநோயாளிச்சீட்டு அசல் **ம.சா.ஆ.9.**

**10).** 01.03.2024–ம் தேதியிட்டு பெரம்பலூர் பிரியம் தனியார் மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட புறநோயாளி பதிவுச்சீட்டு அசல் 2– தாள்கள் அடங்கியது, அது **ம.சா.ஆ.10.**

**11).** பெரம்பலூர் பிரியம் தனியார் மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் 2- எண்ணிக்கைகள் கொண்டது, ரூ.1,451/-க்கானது அசல் **ம.சா.ஆ.11, (கற்றறிந்த 2-ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகின்றது).**

**12).** எனது ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது அது **ம.சா.ஆ.12,** ஆக தாக்கல் செய்கின்றேன். எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**<u>குறுக்கு விசாரணை:- (2-ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>**

விபத்து சமயத்தில் எனது கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் அவருக்கு சொந்தமானது. விபத்து சமயத்தில் எனது கணவரின் இருசக்கர வாகனத்திற்கு தகுதிச்சான்று இல்லை. அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. அவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் 100 சி சி கொண்டது. இருசக்கர வாகனத்திற்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், தகுதிச்சான்று இல்லாமலும், காப்பீடு இல்லாமலும் வாகனத்தை ஓட்டிச்சென்றது தவறு என்றால் சரிதான். விபத்தில் ஈடுபட்ட காரின் பதிவு எண் T N 10 T 5116 என்ற வாகனத்தின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லையென்றால் சரிதான். T N 10 T 5116 என்ற வாகனத்திற்கு தகுதிச்சான்று விபத்து சமயத்தில் இல்லையென்றால் சரிதான். நானும், எனது கணவரும், காரின் உரிமையாளரிடம் சமரசம் பேசி ரூ.80,000/- பணம் பெற்றுக்கொண்டோம் என்றால் இல்லை. பிரியம் மருத்துவமனையில் எனது கணவரின் சிகிச்சை செலவுக்காக காரின் உரிமையாளர் ரூ.50,000/- பணம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். அந்த சிகிச்சைக்கான பணத்தை பெற்றுக்கொண்டு சமரசமாக செல்வோம் என்றும், காவல் நிலையத்தில் வழக்கு தாக்கல் செய்யமாட்டோம் என்றும், நஷ்டஈடு வழக்கு தாக்கல் செய்யமாட்டோம் என்றும் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. காரும், எனது கணவரின் இருசக்கர வாகனமும் மோதிக்கொண்ட

இடம் தார் ரோடு என்றால் சரிதான். விபத்திற்கு எனது கணவர் தான் முழு காரணம் என்று சொன்னால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வாளர் எனது கணவரின் வாகனத்தை பறிமுதல் செய்து விட்டார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது கணவர் மது அருந்தியிருந்தார் என்றால் இல்லை. பெரம்பலூர் பிரியம் மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். தொடர் சிகிச்சை மேற்கொண்டதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பக்காயங்கள் என்றும், அவை பூரணமாக குணம் அடைந்து விட்டது என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டவுடன் நானும், எனது கணவரும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டோம், அதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். அந்த ஆவணங்களை பார்த்தால் எனது கணவர் மது அருந்திய விபரம் தெரிந்து விடும் என்பதால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. எனக்கு வருமானம் எதுவும் கிடையாது என்றும், வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறுகின்றேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுமையாக குணம் அடைந்து விட்டது என்றும், அதனால் எனக்கு வருமான இழப்பு, வேலை இழப்பு, வேலை செய்யும் திறன் பாதிப்பு ஏற்படவில்லையென்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது கணவர் தான் காரணம் என்பதால் நான் எவ்வித நஷ்டஈடும் பெற இயலாது என்றும், மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. மருத்துவ பில்களை மிகைப்படுத்தி சொல்கின்றேன் என்றும், அவற்றிற்கு எந்தவித பரிகாரமும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**